ஊடக அறிக்கை

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

வெளியிடுபவர் புள்ளிவிபரத் திணைக்களம்
திகதி 2021.05.17

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2021 ஏப்பிறல்

**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2021 ஏப்பிறலில் சுருக்கமடைந்தன**

**பருவகால போக்குகளைத் தொடர்ந்து, கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2021 மாச்சிலிருந்து 22.7 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியொன்றுடன் 2021 ஏப்பிறலில் 44.3 ஆக சுருக்கமடைந்தது.** மாச்சில் பதிவாகிய குறிப்பிடத்தக்க விரிவடைதலுடன் ஒப்பிடுகையில் உற்பத்தி, புதிய கட்டளைகள், கொள்வனவுகளின் இருப்பு அத்துடன் தொழில் நிலை துணைச் சுட்டெண்களின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி இதற்கு பிரதான காரணமாக அமைந்தது.

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு பருவகால கேள்வி முடிவுடன் குறிப்பாக உணவு மற்றும் குடிபானத் துறை தயாரித்தலில் புதிய கட்டளைகள் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, உற்பத்தியானது விசேடமாக உணவு மற்றும் குடிபானங்கள் அத்துடன் புடவைகள், அணியும் ஆடைகள் தயாரிப்பு துறையிலுள்ளவை, மாதத்தின் குறைவான பணியாற்றுகின்ற நாட்களின் எண்ணிக்கை அத்துடன் தொழில்நிலையில் வீழ்ச்சி காரணமாக, விசேடமாக புத்தாண்டு விடுமுறை நாட்களின் பின்னர் அனுமதியளிக்கப்படாது சமூகமளிக்காதவர்களில் அதிகரிப்புக் காரணமாக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன. மேலும், ஏப்பிறலின் பிந்திய பகுதியில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மீளெழுச்சிபெற்றமை பல ஊழியர்கள் பணியிடங்களுக்குச் செல்வதைத் தடைப்படுத்தியதுடன் தமது ஒட்டுமொத்த தொழிற்படையினையும் பணிக்கமர்த்துவதை சில தொழில்தருநர்கள் தவிர்த்துக்கொண்டனர்.

| மாறி | மாச் | ஏப் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **67.0** | **44.3** | **-** | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது** |
| | | கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 73.9 | 44.3 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| உற்பத்தி | 72.9 | 33.0 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில்நிலை | 56.4 | 44.9 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 72.3 | 40.9 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 53.7 | 64.8 | + | நீட்சியடைகின்றது உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அதேவேளை, புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி அத்துடன் அதிகரித்த நிச்சயமின்மை என்பவற்றுக்கு இசைவாக கொள்வனவுகளின் இருப்பு சுருக்கமடைந்தது. உச்ச பருவகால கேள்வி முடிவுடன் தமது கொள்வனவுகளை தாம் குறைத்துக்கொண்டதாக பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பாக, உணவு மற்றும் குடிபானத் தயாரிப்புத் துறையினைச் சார்ந்தோர் சுட்டிக்காட்டினர்.


நிரம்பலர் விநியோக நேரம், 2021 ஏப்பிறலில் உயர்வான வேகத்தில் நீட்சியடைந்தது. இதற்கு, இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு வழங்கல்களை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதங்கள் முக்கிய காரணமாக அமைந்தன. மேலும், கப்பற்செலவு வீதங்கள் உயர்வான மட்டங்களில் காணப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் செலவு அதிகரித்தது இது தமது இலாப அளவினை வெகுவாகப் பாதித்தன என பல பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டினர்.

கொவிட்-19 உலகாளவிய நோய்த்தொற்றின் மூன்றாவது அலை பற்றிய நிச்சயமின்மை நாட்டில் தயாரித்தல் நடவடிக்கைகளை தடைபடுத்துமென தயாரிப்பாளர்கள் எச்சரித்தனர். அதற்கமைய, அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரித்தல் நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்க்கைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு சீர்குலைந்தன.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 44.3**

**2021 மாச்சுடன் ஒப்பிடுகையில் 22.7 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




: இலங்கை மத்திய வங்கி

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2021 மாச்சிலிருந்து 0.8 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் ஏப்பிறலில் 55.8 இனைக் கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.

ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய வலயம், இந்தியா மற்றும் சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சு 2021 ஏப்பிறலில் உயர்வான வீதங்களில் அதிகரித்த அதேவேளை ரஷ்யாவின் கொ.மு.சுட்டெண் மெதுவான வேகத்தில் அதிகரித்தது.

*மூலம்: மார்க்கிட்[1], 2021 மே 16இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் கொ.மு.சுட்டெண் 2021 ஏப்பிறலில் 48.9 இற்கு வீழ்ச்சியடைந்து நேரடியாக நான்கு மாதங்களாக பணிகள் துறையில் அவதானிக்கப்பட்ட வளர்ச்சி உத்வேகத்தை திரும்பலடையச் செய்தது.** இவ்வீழ்ச்சிக்கு புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட சீர்குலைவுகள் ஏதுவாக அமைந்தன.

பணிகள் துறையின் புதிய வியாபாரங்கள் மற்றும் வியாபார நடவடிக்கைகள் குறிப்பாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபானங்கள், கல்வி, காப்புறுதி மற்றும் போக்குவரத்துத் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிகளுடன் 2021 ஏப்பிறலில் குறைவடைந்தன. மேலும், ஏனைய தனிப்பட்ட பணிகள் துணைத் துறையும் வியாபார நடவடிக்கைகளில் 2021 ஏப்பிறலில் வீழ்ச்சியொன்றினை அனுபவித்தது. மாதத்தின் பிந்திய பகுதியினை நோக்கி கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலை தோற்றம்பெற்றதிலிருந்து தோன்றிய தாக்கத்திற்கு மத்தியில் ஏப்பிறல் மாதகாலப்பகுதியில் நீண்ட விடுமுறை நாட்கள், பணிகள் துறையில் இம்மிதமடைதலுக்கு வழிவகுத்தன. எவ்வாறிருப்பினும், பிரதானமாக சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு பருவ காலத்தில் பொருட்கள் மற்றும் பணிகளுக்கான கேள்வியின் திடீர் அதிகரிப்பின் காரணமாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபானங்கள், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத் துணைத் துறைகள் 2021 ஏப்பிறலில் அதிகரிப்புக்களை அவதானித்தது.

மேலும், பணிகள் துறையின் வியாபார நடவடிக்கைகள், தொடர்ச்சியாக நான்கு மாதங்களாக அதிகரிக்கின்ற போக்கில் சென்றதன் பின்னர் 2021 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் பரவலுடன் பிரதானமாக போக்குவரத்து மற்றும் கல்வித் துணைத் துறைகள் வீழ்ச்சியடைந்தன.

2021 ஏப்பிறலில் புதிய ஆட்சேர்ப்புக்கள் நிகழாமைக்கு மத்தியில் ஓய்வுபெறுதல் காரணமாக தொழில்நிலை வீழ்ச்சியடைந்தது.

கொவிட்-19 நோயாளிகளின் அதிகரிப்பிற்கு மத்தியல் இனங்காணப்பட்ட இடங்களை முடக்குதல் மற்றும் பணிச் சுழற்சி முறைமைகளை நடைமுறைப்படுத்தல் என்பன காரணமாக தொடர்ச்சியாக இரண்டு மாதங்களாக வீழ்ச்சியடைந்த பின்னர் நிலுவையிலுள்ள பணிகள் 2021 ஏப்பிறலில் அதிகரித்தன.

| மாறி | மாச் | ஏப் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **62.1** | **48.9** | - | **அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது** |
| | | **<u>கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்</u>** | | |
| புதிய வியாபாரங்கள் | 64.7 | 48.9 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| வியாபார நடவடிக்கை | 73.4 | 47.9 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| தொழில்நிலை | 52.2 | 48.4 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 49.4 | 54.4 | + | வீழ்ச்சியிலிருந்து, அதிகரிக்கின்றது |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 70.7 | 44.7 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபாபர நடவடிக்கைகள் மீதான எதிர்பார்க்கைகள், தொடர்ச்சியாக ஐந்து மாதங்களாக அதிகரித்ததன் பின்னர் நாட்டில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மூன்றாம் அலையின் பரவல் மூலம் தீவிரமடைந்த பாதகமான எண்ணப்பாங்குளுக்கமைய 2021 ஏப்பிறலில் வீழ்ச்சியடைந்தன.

**பணிகள்**


**கொ.மு.சு**

**சுட்டெண் பெறுமதி**

**48.9**

**2021 மாச்சுடன் ஒப்பிடுகையில் 13.2 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




***உலக தோற்றப்பாடு:***
***பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு 2021 மாச்சின் 54.7 இலிருந்து 2021 ஏப்பிறலில் 56.6 இற்கு அதிகரித்து உலகளாவிய பணி நடவடிக்கைகளில் மேலும் விரிவடைதலினை சமிக்ஞைப்படுத்துகின்றது.

ஐக்கிய அமெரிக்கா, சீனா, ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஏப்பிறலில் அவற்றின் பணிகள் துறைகள் விரிவடைந்ததை எடுத்துக்காட்டிய அதேவேளை, யப்பானின் கொ.மு.சுட்டெண் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

*(மூலம்: மார்க்கிட்[1], மே 16, 2021 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**
மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.
**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.